Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு
EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 13
தேசியதினசரி

[illegible] மாசி 11 ஜுல்ஹஜ் 23 வெள்ளிக்கிழமை (23 2-68)

அழகிற்கு அழகூட்டும் அலங்கார ஆபரணங்கள் வாங்கி மகிழ
அம்பலவாணர்
நகை மாளிகைக்கு
இன்றே வருகை தாருங்கள்
பொ. அம்பலவாணர்
தங்க வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
தந்தி : வைரம்
தொலை பேசி: 7199

# அக்கராயன்குள குடியேற்றம்: 1,500 ஹரிஜனருக்கு இடம்

## புதிய திட்டத்திற்கு 5000 ஏக்கர் பயன்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

**அக்கராயன் குளத்திட்டத்தில் 35 00 ஏககர் நிலத்தில் சுமார் 1,500 ஹரிஜனவகுப்பினர் குடியேற்றப்படுவார்கள். இங்குளள 5000 ஏக்கர்நிலத்தில்விரைவில் நடைபெறவிருககும் குடியேற்றத்திட்டத்தில் மிகுதி1 500 ஏக்கர் நிலத்திலும் மேலதிகமாகவும் விவசாயிகள குடியேற்றப்படுவர்.**

இக்குடியேற்றத் திட்டம் சம்பந்தமான தீர்மானங்கள் இங்கு நடைபெற்ற யாழ்மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன. யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேர்ணன் அபயசேகராதலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இங்கு நடைபெறவிருக்கும் குடியேற்றத்திட்டத்தால் விவசாயிகளுக்கு வாய்க்கால் மூலம் தண்ணீர் வழங்குவது பற்றியும் அக்கராயன் குளத்திலிருந்து கீழ் நோக்கி தண்ணீர் பாய்ச்சுவது பற்றியும் இங்கு பரிசிலனை செய்யப்பட்டது.

இத்திட்டத்துக்கு விவசாய வசதிக்காக அக்கராயன் குளத்திலிருந்து நீர் உபயோகப்படுத்துவதற்குரிய வசதிகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாவட்ட நீர்ப்பாசன இன்ஜினியர் தற்போது கேட்கப்பட்டுளார் இந்த 5000 ஏக்கர் நிலத்துக்கும் மகாபோகத்திற்கும் நீர் வசதியளிப்பது சம்பந்தமாகவும் இத்திட்டம் அமைக்கவேண்டும் எனக் கூட்டத்தில் கோரப்பட்டது.

இங்குள்ள குடமுருடி ஆற்றின் வடபகுதியில் 1500 ஏக்கரும், தென்பகுதியில் 3500 ஏக்கரும் இக்குடியேற்றத்திட்டத்துக்குப் பாவிக்கப்படலாமெனவும் குடமுருடி ஆறு இத்திட்டத்துக்கு நீர்ப்பாய்ச்சக்கூடியதாக திருப்பப்படும் எனவும் தெரிகின்றது. (கா.நி)

## போக்குவரத்து சீர்கேட்டை ஆராய விசேஷ குழு நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ். மாவட்டத்திலுள்ள போக்குவரத்துச் சீர்கேடுகள் பற்றி ஆராய்ந்து திருத்த வழிகள் பற்றித் திட்டமிடவும், அறிக்கைகள் தயாரிக்கவும் யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளை தலைமையில் விசேஷ குழுவொன்று அமைக்கப்பட்டது.**

யாழ் மாவட்ட இணைப்புக் குழுவினால் நியமிக்கப்பட்ட இக் குழுவின் முதலாவது கூட்டம் இம் மாதம் 24ம் திகதி சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் அரசாங்கம்செயலகத்தில்நடைபெறவிருக்கின்றது. யாழ் மாவட்டத்திலுள்ள சகல பஸ் பிரயாணிகள் சங்கப் பிரதிநிதிகளும் இக் கூட்டத்திற்குசமுகம் கொடுககுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

வடபகுதி இ. போ. ச. பிராந்திய அதிபர் திரு. வேலுப்பிள்ளை, செனட்டர் நடராசா, மாவட்ட தபால் பகுதி அதிபர் திரு .மி.தர்மலிங்கம் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இக் கூட்டத்தால் தயாரிக்கப்படும் திட்டங்கள் அரசாங்க அதிபரின் பார்வையின் கீழ் போக்குவரத்து அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படும். [கா.நி]

## ஆங்கிலத்தின் அவசியம் பற்றி நீதியரசர்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாணவர்களுக்கு தமிழ் மூலமும், சிங்களம் மூலமும் பாடசாலைகளில் கணிதபாடங்களைகற்பிப்பதால் அவர் மேல்படிப்பிற்காக வெளிநாடுகள்ளு சென்று கணிதபாடத்தை ஆங்கிலம்மூலம் கற்க முடியாத நிலை ஏற்படும் எனவே மாணவர்களுக்கு ஆங்கிலம் மூலம் கற்பிக்க வேண்டியது அவசியமாகும்.

மேற்கண்டவாறு யாழ் நூலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ.ஸி குறிப்பிட்டார்.

அமெரிக்க கலாச்சார பகுதியின் ஆதரவுடன் அமெரிக்க தகவல்பகுதி டைரக்டர் திரு. ஜோன்றஸல் தலைமையில் நடைபெற்ற முதல் நாள் நிகழ்ச்சிகளில்டாக்டர் தம்பையா கியூ. ஸி. மேலும் பேசுகையில் தெரிவித்துள்ளதாவது:

சிறுவயதிலிருந்தே கல்லூரிகளில் ஆங்கிலத்தையும் ஒருபாடமாகக் கற்பிக்க வேண்டும். தாய்மொழியைப் போல ஆங்கிலத்தையும் ஒரு முக்கிய பாடமாகக் கற்பித்தால்தான் எமது பிள்ளைகள் பிற்காலத்தில் வெளிநாடுகளுக்குச் சென்று மேற்படிப்பை மேற்கொள்ள முடியும் அதிலும் கணிதபாடம் கற்க ஆங்கிலம் மிக அவசியம்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியின்போது யாழ் நூலக பொறுப்பாளர் திரு. இ. பாக்கியநாதன் பேசுகையில் நூல்நிலையமென்றால் அது வளர்த்துக்கொண்டிருக்கின்ற ஒரு இயக்கம் என்றும் அது வளர அனைவரதும் ஒற்றுமை அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் எம். அற்புதானந்தன் சக்கரிஒ பீறிஸ். எம். ஸ்ரீவர்த்தன ஆகியோரும் பேசினர்கள். [கா.நி]

## தானியகளஞ்சியத்துக்கு காங்கேசன்துறைப.ச.ஆதரவு

அளவெட்டி, வியாழன்

காங்கேசன்துறையில் ஒரு கோடி ரூபாய் செலவில் அரசாங்கம் அமைக்க இருக்கும் நெற் களஞ்சியத்துக்கு காங்கேசன்துறைப் பட்டின சபை ஆதரவு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலமும், பட்டின சபை எல்லைக்குட்பட்டதுமான அரசாங்க வாடி வீட்டுக்கு அருகாமையிலுள்ள நிலத்தில் தானியக்களஞ்சியம் அமைக்க யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா திட்டமிட்டிருப்பதால், அவ்விடத்தில் பட்டினசபையால் நிறுவப்பட்டுள்ள பொது மலசலகூடத்தை இடித்து பட்டினத்தின் நலன் கருதி நெற்களஞ்சியம் அமைக்க ஆவன செய்யவேண்டுமென காங்கேசன்துறை பட்டின சபையில் நேற்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பட்டினசபை மண்டபத்தில் பட்டினசபைத் தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற மதாந்தக் கூட்டத்தில் அத்தியாவசியமான சில வட்டாரங்களுக்கு மின்சார விநியோக விஸ்தரிப்பு நடவடிக்கை மேற்கொள்வது எனவும், சனசமூக நிலையங்களின் மேற்பார்வை உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து காரியாதிகாரி பகுதிக்கு மாற்றப்பட்டாலும், பட்டின சங்க எல்லைக்குட்பட்ட வரி இறுப்பாளரின் நலன் கருதி சனசமூகநிலையங்களுக்கும் ஆகக்கூடியது 60 ரூபா முதல் குறைந்தது 30 ரூபாவரைநன்கொடைப் பணம் வழங்குவது எனவும் பட்டின சபைக்குட்பட்ட வைத்தியர்களுக்கும்90ரூபா முதல் 45 ரூபா வரை நன்கொடை வழங்குவதென்வும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

## நெருப்புப் பற்றியதால் குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

உடம்பில் நெருப்புப் பற்றியதால் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கொடிகாமத்தைச் சேர்ந்த நான்குவயதுக் குழந்தையொன்று நேற்று முன்தினம் மரணமானது.

மரணமான கலைவாணி நமசிவாயத்தின் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார். சம்பவம் நடந்தபோது மரணமான குழந்தையின் தமையனார் வீட்டுக்குப் பின்னால் குப்பை எரித்துக்கொண்டிருந்ததாகவும் .மரணமான குழந்தையும் அங்கு சென்றபோது ஆடையில்பற்றிய நெருப்பு குழந்தையின் உடம்பிலும் பற்றியதாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்திருந்தனர். (கா.நி)

## பொலிசார் தேடுகின்றனர்

குரும்பசிட்டி, வியாழன்

ஆஸ்பத்திரிக் காவலாளியை ஏமாற்றி பகிரங்க வேலைமராமத்துப் பகுதிக்கு சொந்தமான 12 தகரங்களைக் கொண்ட தார்பீப்பாக் கடத்தப்பட்டது. சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்ட காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வீ. செல்லையா ஏழாலைக் கிராமத்தில் வைத்துலொறியொன்றுடன் கூடவேஇவற்றைக் கைப்பற்றியுள்ளார். இம்மோசடிக் கடத்தல் திருட்டுசம்பந்தமாக நவாலி வாசியான குட்டி மார்க்கண்டன் என்பவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

மயிலிட்டி தெற்கு பிரசவ விடுதிச் சாலையில் பகிரங்க வேலைப்பகுதி ஓவசியர் திரு. ச. இராசையா 12 பீப்பாக்களை ஆஸ்பத்திரி காவலாளியின் பாதுகாப்பில் வைத்திருந்தார். காவலாளியிடம் பொய் சொல்லி ஏமாற்றி மோசடிக் கடிதம் ஒன்றைக் கொடுத்து இவை லொறி மூலம் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பூநகரியில் மலேரியா

பூநகரி, வியாழன்

பூநகரி நாச்சிக்குடாவில் மலேரியா நோய் பரவிவருவதாகவும் இது வரை இந்நோயினால் 7 பேர் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறியப்படுகிறது. இந்நோயை மேலும் பரவாமல் தடை செய்யும் வேலையில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அழியக்கூடிய பொருள்மீது வைக்கும் பற்றுதல்தான் துயருக்குக் காரணம். அந்தத் துயரமே அழியக்கூடாத, உண்மையாகிற கடவுளிடம் பற்று வைக்க நமக்கு உதவி செய்கின்றது.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மாசி மாதம் 11ந்திகதி [23-2-68]


## நாட்டு வைத்தியசாலைகள்

இதுவரைகொழும்பில் மட்டும்தான் மத்திய ஆயுர்வேதவைத்தியசாலை இருக்கின்றது. இனி நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது மத்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளை நிறுவசுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளதுடன், இவ்வாண்டிலே புதிதாக 50 நாட்டு வைத்தியசாலைகளை ஏற்படுத்தப் போவதாக ஒரு செய்தி கூறுகின்றது. இது உண்மையாயின் ஆங்காங்கேயுள்ள பொதுமக்களுக்கு இதனால் விசேஷ நன்மை ஏற்படுவதாக இருக்கும்.

யாழ்ப்பாணத்திலே ஒரு மத்திய சித்த வைத்தியசாலை அமைக்க சில மாதங்களுக்குமுன் கைதடியில் சுகாதார அமைச்சர் அடிக்கல் நாட்டிச் சென்றார். பல்லாண்டு காலமாக இதுபற்றிய யோசனை இருந்தும், யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் இதற்குத் தகுந்த இடத்தை மாநகரசபை தராத காரணத்தால் இது ஒத்திப்போடப்பட்டது. மனமுண்டானால் நிச்சயம்இடமுண்டு. பொதுமக்கள் அதிகமாக வாழும் நகருக்குள்ளாக இவ்வித வைத்தியசாலை அமைப்பதுதான் மக்களுக்கு அதிக வசதியாக இருக்குமென்றும்இப்போதும் அதற்குக் காலங் கடந்துவிடவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. இது எப்படியாயினும், இங்கு அவ்வித நாட்டு வைத்தியசாலையை இனியும் காலம் தாழ்த்தாது அமைப்பாரென்றே பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

மேல்நாட்டு வைத்திய முறையில் விசேஷ அபிவிருத்தி இருந்தும், நம் பொதுமக்களுக்கு, சிறப்பாக கிராமவாசிகளுக்கு நாட்டு மருத்துவத்தில் அதிக நம்பிக்கையுள்ளது. பிறவைத்தியர் கைவிட்ட பல நோயாளரை நாட்டு வைத்தியர் குணப்படுத்தியுள்ளனரென்பதை அவர்கள் அறிவர். அந்தந்த நாட்டு வைத்தியர் அந்தந்த நாட்டு சுவாத்தியத்துக்கு ஏற்றதென்பதும், வழிவழியாகக் கையாளப்பட்டு வந்துள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் மருந்துகளுக்கான சரக்குகள் அநேகமாக இங்கேயே கிடைப்பதுடன், மற்ற மருந்துகளைவிட விலை மலிவாகும். இதனால் நமது செலாவணியும் பாதுகாக்கப்படும். இதேசமயத்தில் இங்குள்ள வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்புகளும் கிடைக்கும்.

நாட்டு வைத்தியர்களிடையே போதிய ஒத்துழைப்பும், அரசாங்கத்தின் போதிய ஆதரவும் இல்லாமையால் தான், நமது வைத்திய முறைகள் தக்கபடி முன்னேறமுடியவில்லை. நாட்டுவைத்தியர்கள் சுயநலப்போட்டிகளை விட்டு ஒத்துழைப்பதாயின், இவ்வைத்தியம் முன்னேறுவதுடன்பொது மக்களுக்கும் இதனால் விசேஷ நன்மை ஏற்படுவதாக இருக்கும்.

நமது வைத்தியத்துக்கு ஆதரவு அளிக்க அரசாங்கம் ஆவலுடன் இருக்கையில், இதில் சிரத்தையுள்ளவர்கள் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி முதல்தரமான வைத்தியசாலை ஏற்படவும், நாட்டு மருத்துவம் அபிருத்தி அடைந்து மக்களுக்கு அதிக நன்மை பயக்கவும் வழிவகை செய்து கொள்ள வேண்டும்.

ஆசிரியருக்குக் கடிதம்

# சிந்தனையும் செயலும் மாற வேண்டும்

தமிழ் மக்கள் வேற்றுமைகளை விலத்தி தங்கள் சமுதாயத்துக்காகவும் நாட்டின் பொது நலனுக்காகவும் ஒற்றுமைப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று தாங்கள் சமீபத்தைய ஆசிரிய தலையங்கம் ஒன்றில் குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமானதும் பாராட்டத்தக்கதுமாகும். முக்கியமாக, சாதிப் பிரச்னைகளுக்கு விரைவில் இணக்கமான முடிவு காணவேண்டுமென்ற தங்கள் வேண்டுகோள் ஆக்க பூர்வமானது. தமிழராகிய நாங்கள் எங்களுக்குள்ளே சுயநலமில்லாது சந்தோஷமாகவும் சுமுகமாகவும் வாழ்ந்து, அதுபோல மற்றவர்களோடும் புழங்கத் தெரியாமல் இருக்கும்போது மற்றவர்களை குறை கூறுவது ஆபத்தானதும் அநாவசியமானதுமாகும். தமிழின் பெருமையையும் தமிழனின் கலாச்சாரம், பழம் பெருமை முதலியவற்றையும் பற்றி அடிக்கடி பேசிக்கொள்வதுமட்டும் போதாது அழகுமல்ல, நமது நடத்தை தமிழ்ப் பண்பாட்டுக்கும் லட்சியங்களுக்கும் ஒத்ததாயிருக்க வேண்டும்.

தமிழர் வாழ்க்கையின் உயர்ந்த தத்துவங்களையும், மகாத்மா காந்தியின் நூறாவது ஜெயந்தியையும், இலங்கையின் ஒற்றுமையையும் மனத்தில் இருத்தி எங்கள் சிந்தனைகளையும் செயல்களையும் மாற்றி அமைத்துக் கொள்வோமாக.

எஸ். சிவசுப்பிரமணியம்
கொழும்பு 12

# பிரதமருக்கு சைவசமய அனுட்டான சபை மகஜர்

குரும்பசிட்டி, வியாழன்

''இலங்கையில் பௌத்த சைவ சமயத்தைச் சேர்ந்த இருபகுதி மக்களிடையிலும் பல்லாண்டு காலமாக பரஸ்பர நல்லுறவு, ஒற்றுமை நிலவி வருகின்றது. இதனை சிதைவு படுத்தி குந்தகம் ஏற்படுத்த ஒருசில பௌத்த பிக்குகள் முயற்சிப்பது வருந்தத் தக்கது, யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற சாதித் துவேஷ வேறுபாடுகளை நீக்கிவைத்து சமாதானத்தீர்வு ஏற்படுத்த என அண்மையில் தென்னிலங்கையிலிருந்து விஜயம் செய்திருந்த பௌத்த பிக்குகள் கோஷ்டி மதமாற்றம் செய்யும் நோக்கத்திலேயே கவனம் செலுத்தியதாகத் தெரிகிறது. சைவ சமயத்தவர் மத்தியில் உள்ள சமூக குறைபாடுகள் வித்தியாசங்களை ஒழிக்க தேசவழமை சட்டத்தில் தகுந்த பரிகாரம் காட்டப்பட்டிருக்கின்றது. எனவே ஏனைய மதத்தவர் புகுந்து சமயப் பூசல்களைக் கிளறி வைக்க வேண்டாம். சமாதானம் என்ற போர்வையில் வருகை தந்து மதமாற்றம் செய்வதில் ஈடுபடும் பௌத்த குருமாரை யாழ்ப்பாணம் வருவதற்கு தடை விதியுங்கள்.''

அகில இலங்கை சைவ சமய அனுட்டான பாதுகாப்புச் சபையார் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவிற்கு அனுப்பி வைத்துள்ள மகஜர்ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

கீரிமலை நகுலேஸ்வராவித்தியாசாலை மண்டபத்தில் திரு. க. சிவலிங்கம் ஜே.பி. தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை சைவசமய அனுட்டான பாதுகாப்புச் சபையின் விசேஷ கூட்டம் ஒன்றில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# பண்முறையோடு தேவாரம் ஓதிய இசைப்புலவர்

இற்றைக்குஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் குப்பிளான் என்னும் கிராமத்தில் நற்குடும்பத்தில் தோன்றிய பண் இசைப் புலவர் எஸ். செல்லத்துரை அவர்கள் இளமைப்பிராயத்தில் நன்றாகத் தமிழ்கற்று அத்தோடு நாடகக்கலையும் கற்றார். இவர் முதல் நடித்த நாடகம் சிறுத்தொண்டனார். இதில் சிறுத்தொண்டனாக நடித்தார். இயற்கையிலேயே நல்ல ஞானபாவமுள்ள இவர், பண், தேவாரம், திருப்புகழ் பாடுவதில் வல்லவராக விளங்கினார்.

இவர் தனது 18ம் வயதில் இந்தியா சென்று அங்கு சங்கீதம் பயின்றார். திருப்பெருந்துறை ஆதீனத்திலும் திருவாவடு துறையிலும் இருந்து தேவாரப் பண் முறையோடு பயின்று பல பரீட்சைகளில் சித்தியடைந்து தராதரப் பத்திரங்களும் பெற்றார். இவருடன் ஒன்றாகப் படித்தவரே இசையரசு எம். தண்டபாணி தேசிகர். திரு. செல்லத்துரை அவர்களுக்கு மதுரையில் இசைவல்லார் என்ற பட்டமும் கிடைத்தது.

மீண்டும் யாழ்ப்பாணம் வந்த இசை வல்லார் செல்லத்துரை கதாப்பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். இதையே தொழிலாக மேற்கொண்டார் பண்ணுக்கு உரிய இராகத்தோடும் அதற்கே உரிய தாளத்தோடும் விள்ளியா [illegible] தில் இசைவல்லார் திறமை [illegible] திரு புகழ் பாடுவதிலும் வல்லவராகவே திகழ்ந்தார்.

எங்கு அவருடைய பிரசங்கம் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் ஜனக்கூட்டம் நிறைந்து காணப்படும். தேவாரம், பண், திருப்புகழ் இவற்றுக்கு அதற்கென்று அமைக்கப்பட்டுள்ள இராகங்களிலும் தாள அமைப்பிலுமே பாடவேண்டும் என்று இசைவல்லார் பல பிரசங்கங்களில் கூறியுள்ளார்கள்.

இவர் முத்தமிழ் மன்றத்தின் நந்தனார் நாடகத்தில் நந்தனாராகத்தோன்றி மிகச் சிறப்புடன் நடித்தார்.

சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெரும் தொண்டாற்றி நாட்டிலே அமைதியும் அன்பும் இறைவழிபாடும் பல்கிப் பெருகி மனிதகுலம் சிறப்புற வாழ வழிவகுத்த இசைப்புலவர் செல்லத்துரை இம்மாதம் 17-ம் திகதி சனிக்கிழமை இவ்வுலகவாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

—கலைமணி எஸ். வடிவேல்

## இன்றைய பலன்

[23-2-68]

வெள்ளிக்கிழமை

[மாசி மீ 11௳]

திதி - தசமி மாலை 5-59 மேல் ஏகாதசி.
நட்சத்திரம் - மூலம் இரவு 10-33 மேல் பூராடம்.
ராகுகாலம்- 11-01 — 12-31.
சுபநேரம் - 6-31 — 8-01.

இன்று பிறந்தவர்களுக்கு:- புதிர் போடும் ஆண்டு. எதிர்பாராத சிக்கல்களும் அதே நேரத்தில் திடீர் அதிர்ஷ்டங்களுக்கும் இடமுண்டு. ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றும் சம்பவங்கள் பல முடிவில் இலகுவாகலாம். மனை வாழ்வில் சிறு பிணிக்கு இடமுண்டு. குழந்தைகளின் உடல் நலத்தைக் கவனிக்கவும். கோபத்தைத் தவிர்த்தால் யாவும் நலம்.

மேஷம்- குணம் காணும் நிலை, புதிய உற்சாகம்.
ரிஷபம் - அன்னிய வாசம், அகால போசனம்.
மிதுனம் - இருமனம் கலக்கும், இனிமையும் உண்டு.
கடகம் - தொழிலில் தொல்லை, தொடர்பால் பகை.
சிம்மம் - தெய்வ குரு பக்தி, தேடி வரும் பொருள்.
கன்னி - தொழிலால் பெருமை, ஒளிமயமான வாழ்வு.
துலாம் - பொருள் வரவு, பொது சனத் தொடர்பு.
விருச்சிகம் - நெஞ்சில் அலைகள், தூக்கமின்மை.
தனுசு - அவசர முடிவு, அதன் வழித் துன்பம்.
மகரம்- பேச்சுவன்மை, பெரும் புகழ் உண்டு.
கும்பம் - பணம் பத்தும் செய்யும், படாடோபமுண்டு
மீனம் - தேன் சிந்தும் வாழ்வு, தென்றல் வீசும்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## புதிய தேர்

யாழ்ப்பாணம், வெள்ளி
வண்ணார்பண்ணை நாச்சியம்பாள் கோவிலுக்கு புதிய தேர் ஒன்று உருவாக்கப் படவிருக்கிறது. இதற்கான நிதி இப்போது சேகரிக்கப் பட்டு வருகிறது.

## நாட்டிலும் நகரிலும்

'வருகிற இருபத்தோராந் நூற்றாண்டில் இவ்வையகம்தில் அல்லி ராஜ்யம் நடக்கும். அதாவது பெண்களே உலகை ஆளுவார்கள் ஆண்கள் விஞ்ஞான ஆராய்ச்சியிலும் கவிதை ஆராய்ச்சியிலும் பொழுதைப் போக்குவார்கள் பெண்கள் ஆண்களின் விஞ்ஞான ஆராய்ச்சிகளை தொழில் உற்பத்தியில் பயன்படுத்துவார்கள் பெண்களே உலகில் சர்வாதிகாரிகளாக விளங்குவார்கள்.'

இப்படியெல்லாம் கூறுபவர் அமெரிக்காவிலுள்ள புல்லர் என்ற ஒரு தத்துவ நிபுணர்.

புல்லர் வெறும் 'புல்லர்' என்று நீங்கள் தட்டிக்கழித்தாலும் அவர் ஒரு மதிப்பு வாய்ந்த பேராசிரியர் என்பதையும் அவருடைய கருத்துக்களை பல அறிவாளிகள் கூர்ந்து கவனிப்பார்கள் என்பதையும் மறக்கப்படாது.

இன்னும் முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குள் பெண் ஜன்மம் உலகில் தனியாதிக்கம் செலுத்தும் என்றுகூற எமக்கு ஒரு புல்லர் தேவையில்லை. இப்பொழுதே, இங்கேயே நடந்தவரும் மாறுதல்களைப் பார்க்குமிடத்து இது இருபதாம் நூற்றாண்டிலேயே நடந்திருக்கவேண்டும் என்று இவர் நினைக்கிறார்.

அரசியலிலும், வியாபாரத்திலும், காரியாலயங்களிலும் நீதிமன்றங்களிலும், பொதுவேலைஸ்தலங்களிலும் இப்பொழுது ஆண் வர்க்கம் ஆட்சிசெலுத்துகிறது. இந்நிலைமை அப்படியே முற்றாக மாறி ஆண்கள் இருக்குமிடத்துக்கு பெண்கள் வந்தால் எப்படி இருக்கும் என்று சிந்திக்கும்போது பல வகையான கற்பனைகள் தோன்றுகின்றன.

பொதுக்கூட்டங்களில் தலைவராயிருக்கும் ஆண்கள் பேசும்போது 'தாய்மார்களே! சகோதரர்களே!' என்று ஆரம்பிக்கிறார்கள். அல்லி ராஜ்யம் வந்துவிட்டால் தலைவராயிருக்கும் தலைவி (?) 'தந்தைமார்களே! சகோதரிகளே!' என்று ஆரம்பிக்கக்கூடும்

இப்பொழுது பெண்களைப் பெற்ற பிதாக்கள் ஏழு ஜோடி செருப்பு தேயுவரை அலைந்து வரன் தேடுகிறார்கள். இனிமேல் ஆண்களைப் பெற்ற மாதாக்கள் 'வரி' தேடி இப்படி அலையலாமோ?

ஆண் பார்க்க வருமிடத்தில் ருசிகரமான சம்பவங்கள் நிகழலாம். மாப்பிள்ளை ஒதுங்கிப் பதுங்கி வந்து சேருவார். இப்பொழுது பெண்கள் வீணை வாசித்துப் பாடி தமது சமர்த்தைக் காட்டுவதுபோல இனிமேல் ஆண்கள் சமையல் வேலை செய்துகாட்டவும் நேரிடலாம்.

சீதனப் பழக்கமும் தலைகீழாய்ப்போய்விடும்.

'இந்து, வேளாள குலத்திலுள்ள இருபத்தைந்து வயதான, மிருதுவான ஆணுக்கு டாக்டர், என்ஜினியர் அல்லது அப்புக்காத்து வேலையார்க்கும் திடகாத்திரமான பெண்தேவை ரூபாய் 25,000 காசாகவும் ரூபாய் 25,000 க்கு காணிச் சொத்தும் சீதனமாக வழங்கப்படும்' இப்படி விளம்பரங்களை அடிக்கடி பத்திரிகைகளில் காணலாம்.

திருமண அழைப்புகளும் மாறிவிடக்கூடும்.

'திருமதி திடகாத்திர வல்லிக்கும் திரு. மெல்லிய மொழியாருக்கும் திருமணம் நடக்கும்' என்று அழைப்புக்கள் வரலாம். திருமணத்தின் பின் திரு. மெல்லின

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ராண் ஓவ் கச்' எல்லையில்

# பாகிஸ்தான் இயந்திரப்படகுகளை இந்தியா கைப்பற்றியது

புதுடில்லி, பெப். 22 'ராண் ஓவ்கச் எல்லையில், இந்தியப் பிரதேசத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்த 3 பாகிஸ்தான் இயந்திரப் படகுகளைக் கடந்த சில தினங்களில் இந்தியா கைப்பற்றியுள்ளது. இம்மூன்று படகுகளுடன், 58 சிப்பந்திகளும் தடுத்துநிறுத்தப் பட்டுள்ளனர்.

கடந்த 3 மாதங்களில், 367 பேருடன் கூடிய 22 பாகிஸ்தான் படகுகளை இந்தியா பிடித்துள்ளது.

ராண் ஓவ் கச் எல்லையில் இந்திய எல்லைப் பொலிசார் தமது ரோந்து சுற்றுதலைத் தீவிரப்படுத்தியதைத் தொடர்ந்தே இக்கப்பல்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

## பாகிஸ்தான் எச்சரிக்கை

'ராண் ஓவ் கச்' பிரதேச தகராறையொட்டி, அண்மையில் சர்வதேசவிசாரணை மன்றம் அளித்துள்ள தீர்ப்பை இந்தியா ஏற்காவிட்டால், அதனுல் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாமென்று பாகிஸ்தான் எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கையை, நேற்று ரேடியோ பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

சர்வதேசவிசாரணை மன்றத்தின் தீர்ப்புக்கிணங்க தனக்குரிய பகுதியை இந்தியா விட்டுக்கொடுக்காவிட்டால், வருந்தத்தக்க சூழ்நிலை ஏற்படலாமென பாகிஸ்தான் எச்சரிக்கை செய்துள்ளது.

## விஞ்ஞான பயிற்சி

உடுப்பிட்டி, புதன் சகல பாடசாலைகளிலும் ஆசிரியர்களிடையே பொது விஞ்ஞானபாட அறிவை அதிகரிக்கும் முகமாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கனிஷ்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு பொதுவிஞ்ஞானபாடத்தில் போதிய பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

---

## நிவாரணம் வழங்கப்படுகிறது

நெடுந்தீவு, வியாழன் அண்மையில் வீசிய புயலாலும் பெருவெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இன்றுமாலை 1 மணி தொடக்கம் நிவாரண நிதி நெடுந்தீவில் உள்ள மக்களுக்கு வழங்கப்படுகிறது. சமூகசேவை இலாகா அதிகாரிகளும் நெடுந்தீவு காரியாதிகாரியும் கிராம சேவையாளர்களின் உதவியோடு இதனை வழங்கிவருகிருர்கள்,

நெடுந்தீவு காரியாதிகாரி கந்தோரிலேயே இப்பணம் வழங்கப்படுகிறது.

ஆடு, மாடு, பயிர்சேதம் வழங்கப்படாமை குறித்து பொதுமக்கள் கவலைகொண்டுள்ளார்கள்.

வாஷிங்டனிலுள்ள

# ரஷ்யத் தூதரகத்தில் வெடிகுண்டு விபத்து

## ரஷ்யா கடும் ஆட்சேபம்

வாஷிங்டன், பெப். 22

**ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் நேற்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சனைச் சந்தித்து வியட்நும் விவகாரம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்திஞர். பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், அவை பலனுள்ளதாக அமைந்ததாக யூதாண்ட் அறிவித்தார்.**

**வியட்நும் பிரச்னைக்கு ஒரு முடிவு காணும்பொருட்டு புதுடில்லி, மாஸ்கோ, பாரிஸ் ஆகிய தலைநகர்களின் அவ்வவ் நாட்டுத்தலைவர்களைச் சந்தித்துப் பேசிய விவரங்களை யூதாண்ட் ஜனதிபதி ஜோன்சனிடம் தெரிவித்தார்.**

ஆனுலும் வடவியட்நும் மீதான அமெரிக்க குண்டு வீச்சை நியந்தனை எதுவுமின்றி நிறுத்துவதற்கு முடியாது என ஜனதிபதி ஜோன்சன் யூதாண்டிடம் வலியுறுத்தியுள்ளார்.

தமது சான் அன்டோனியோ முடிவை மாற்றமுடியாது என்றும் அமெரிக்க-வியட்நும் கொள்கைக்கு அதுவே அடிப்படையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யூதாண்ட், தாம் மேற்கொண்ட வியட்நும் சமாதான விஜயம் பற்றி விபரமான அறிக்கையொன்றைச் சனிக்கிழமையன்று ஐ. நா. பொதுச்சபையில் சமர்ப்பிப்பாரெனத் தெரிகிறது.

இதற்கிடையில் தென் வியட்நுமில்அமெரிக்கதென் வியட்நும் துருப்புகளுக்கும் வடவியட்நும். வியட்கொங் துருப்புகளுக்குமிடையே யான சண்டை தொடர்ந்து பல இடங்களிலும் உக்கிரமாகநடைபெற்றுவருகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

# பங்களூர் பள்ளிக்கூடங்கள் அடுத்த திங்கள் திறக்கப்படும்

பங்களூர், பெப்.22 பங்களூரில் அடுத்த திங்கட்கிழமையன்று எல்லாப் பள்ளிக்கூடங்களும் திறக்கப்படும். பல்கலைக்கழக பரீட்சைகள் அடுத்தமாதம் 17ம் திகதி நடைபெறும்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை முன்னிட்டு பங்களூரிலுள்ள பள்ளிக்கூடங்கள் அனைத்தும் கடந்த 15-ம் திகதி தொடக்கம் காலவரையறையின்றி மூடப்பட்டிருந்தது.

கட்டிட விபத்தில்

## 18 குழந்தைகள் மரணம்

புதுடில்லி, பெப். 23 புதுடில்லிக்கருகேயுள்ள கிராமத்தில், ஒரு கட்டிடத்தின் மேல் மாடி இடிந்து விழுந்ததால் 15 குழந்தைகளும் ஒரு பெண்ணும் உயிரிழந்தனர்.

மற்றும் 46 குழந்தைகள், அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

# 'நிபந்தனையின்றி வட வியட்நும் மீது குண்டுவீச்சை நிறுத்த முடியாது'

## யூ தாண்டிடம் ஜோன்சன்

மாஸ்கோ, பெப்22 நேற்றுவாஷிங்டனிலுள்ள ரஷ்ய தூதரக் கட்டிடத்தில் ஏற்பட்ட ஒரு வெடிகுண்டு சம்பவத்தையிட்டு அமெரிக்காவிடம் ரஷ்யா வன்மையான ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

குற்றவாளிகளெனக் கண்டுபிடிக்கப்படுபவர்கள் மீது கடுமையான தண்டனை எடுக்கப்படவேண்டுமென ரஷ்யா கோரியுள்ளது. அத்துடன் தமதுதூதரகத்துக்கும்அதில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் பந்தோபஸ்து அளிக்கக்கூடிய பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்குமாறும் ரஷ்யா அமெரிக்காவிடம் வலியுறுத்தியுள்ளது,

வெடிகுண்டுசம்பவம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் 'பொருளற்றசெயல்' என அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார்.

கட்டிடத்தில் ஏற்பட்ட சேதத்தைப்பார்க்க அமெரிக்க இராணுவ அதிகாரிகள் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று விடியற்காலை ஏற்பட்ட இந்த வெடிகுண்டு விபத்து கட்டிடத்தை அதிரச்செய்தது.

கட்டிடத்தின் பின்பகுதியிலேயே விபத்து ஏற்பட்டதென வாஷிங்டன் பொலிசார் அறிவித்துள்ளனர்.

சேதத்தினுல் கட்டிடத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் விரிவாக இல்லையெனத் தெரிகிறது.

## விளையாட்டு வினையாகியது

பென்ஸில்வேனியா, பெப்; 22 அமெரிக்காவிலுள்ள பென்ஸில்வேனியா மாகாணத்திலுள்ள ஜெருஸ்லின் என்னுமிடத்தில் பிரென்னர், மூர் என்னும் இளைஞர்களுட்பட ஐந்து வாலிபர்கள் விளையாட்டாகச் சண்டை பிடித்தது வினைவாக முடிந்தது. அவர்களில் ஒருவரான பிரென்னர் உயிரிழக்க நேரிட்டது.

ஒரு நண்பனின் வீட்டின் முன்பாக நடந்த இந்த விளையாட்டுச் சண்டையில் 18 வயதானபிரென்னர், தனது நாடியை நீட்டியபடி 'வா, வா. வந்து இடி,' என்று தனது நண்பன் வில்லியம் மூர் [18 வயது] என்பவனிடம் கூறினுன். மூரும் பிரென்னரின் நாடிக்கு ஒரு இடி கொடுத்தான். அந்த இடியுடன் கீழே விழுந்த பிரென்னர், உடைந்த நாடியுடன், அறிவுமயங்கிக் கிடந்தான். பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட, 4 மணி நேரத்துக்குள் பிரென்னர் உயிர்நீத்தான்.

பிரென்னரின் நண்ப

## பெல்ஜியத்தில் பொதுத்தேர்தல்

பிரசல்லஸ், பெப். 23 பெல்ஜியத்தில், விரைவில் பொதுத்தேர்தல் நடக்கவிருக்கிறது. மன்னர்போதுசான், பார்லிமென்டைக் கலைக்க முடிவுசெய்துள்ளார்.

பிரெஞ்சு ஆங்கில மொழி பேசும் மக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள தகராறே, மன்னரின் முடிவுக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

---

கனடாவில்

## பியேர்ஸன் ஆட்சிக்கு பலத்த சோதனை

ஒட்டாவா, பெப். 22 கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியேர்ஸனின் அரசாங்கம், வரி மசோதா ஒன்றின் மீது பார்லிமென்டில்நடைபெற்றவாக்கெடுப்பில் தோல்வியுற்றதைத் தொடர்ந்து கனடாவில்எந்நேரமும் பொதுத்தேர்தல் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

[illegible] சுமத்திக் கைதுசெய்துள்ளனர்.


## விவசாயிகளுக்கு அறிவித்தல்

BAYER

இன்றைக்கே பாவியுங்கள்

பொலிடோல் — சர்வ பூச்சிநாசினி

உருளைக்கிழங்கு — வெளிறல் அல்லது வாடல் நோய்க்கு அன்றக் கோ[illegible] தந்தகுத்தி, ஆனைப்பே[illegible] ஆகிய பூச்சி புழுக்க[illegible] அழிக்க பொலிடோ[illegible] அல்லது மெற்றசிஸ்டொக்[illegible]

வெங்காயம் — பனிப்பூச்சி அழிக்க பொ[illegible] டோல் அல்லது பொலித்[illegible] யோன் களைகட்[illegible] டக்தல் களைகொல்[illegible]

கத்தரி — ஆகிய மற்றும் பயிர்க[illegible] அழிக்கும் எல்லாப் பூச்[illegible] புழுக்களை கட்டுப்படுத்[illegible] பொலிடோல் அல்[illegible] மெற்றசிஸ்டொக்ஸ் அல்லது பொலித்தியோன் பாவிக்கலாம்.

கிடைக்கும் இடங்கள்:

'புறேவின்ஷல் டிஸ்றிபியூட்டர்ஸ்'
ஓட்டோஸ் கட்டிடம்
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 244 & 628

வடபகுதி விவசாய உற்பத்தியாள[illegible] கூட்டுறவுச் சமாசம்
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: "504"


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# “ஆண்பெண் இருபாலரும் உழைத்து வாழவேண்டும்”

சுழிபுரம், வியா

உலக நாட்டு மக்களுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டு மக்கள் மிகவும் பின்தங்கியவர்களாகவுள்ளனர். உடல் உழைப்பால் முன்னேறிய மேலைநாட்டு மக்கள் எந்த வேலையையும் கௌரவமாகச் செய்து அதனால் மேம்பாடுடையவர்களாக விளங்குகின்றனர். பல்கலைக்கழகத்திலே பயிலும் பட்டதாரி மாணவர்கள் இளைப்புகளில் உணவு பரிமாறுதல், சுத்தம் செய்தல் போன்ற வேலைகளைச் செய்து சம்பாதிக்கின்றனர். ஆனால் இங்கு அந்தஸ்து சாதி பார்த்து சீரழிவதுடன் அரசாங்க உத்தியோகம் தான் வேண்டும் என அடம்பிடிக்கின்றனர். இன்றைய நிலையில் அரசாங்க உத்தியோகம் இல்லாததால் சகலரும் உடல் உழைப்பால் தான் வாழவேண்டியுள்ளது. ஆண் பெண் இருபாலரும் உழைத்து வாழவேண்டும். கைத்தொழில், நெசவு நிலையங்களில் வேலை செய்வதன் மூலம் தமது தேவையைப் பூர்த்தி செய்வதுடன், பிறருக்கும் பயன்படும் வகையில் வாழ முடியும்” என சுழிபுரம் மத்திய நெசவு நிலைய முதலாவது சனசமூக நிலைய பதினெட்டாவது ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

நெசவுநிலைய முன்றலில் நடைபெற்ற விழாவுக்கு ... சி. சிவப்பிரகாசம் தலைமை வகித்தார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், “கணவன் மட்டும் உழைத்து, மனைவி மக்கள் சும்மா இருந்து வாழ்ந்த காலம் இன்று இல்லை. இன்று குடும்பத்திலுள்ள சகலரும் உழைக்க வேண்டியுள்ளது. தேவைகளின் அதிகரிப்பே இதற்குக் காரணம். என்று கூறினார்.

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி திரு. என். மாணிக்கநடராசா பேசுகையில், இந்நாட்டில் வாழும் விவசாயிகள், தொழிலாளர்கள் தக்க வகையில் கௌரவிக்கப் படாததால் தான் நாம் அதிகம் பின்தங்கியவர்களாக வாழவேண்டியேற்பட்டதென்றும், மாதச்சம்பளம் பெறும் உத்தியோகம் தான் சிறப்புடையது என எண்ணப்பட்டதால் சமூகத்தில் சீர்கேடு ஏற்பட்டதென்றும், வருங்காலத்தைச் சீருடனும் சிறப்புடனுமாக்க கைத்தொழில், கமத்தொழில் போன்றவற்றில் ஈடுபடவேண்டும் எனவும் சொன்னார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில்,

மாணவ ஆசிரியர்தொழில் பார்க்க விரும்பும் ஒருபெண் மணியிலும் பார்க்க நெசவு நெய்யும் பெண்மணி அதிக லாபத்தை அடையலாமென்றார்.

ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தினரின் சக்கடத்தார் நாடகமும், நெசவு நிலைய மாணவிகளின் நாடகமும் மற்றும்கோஷ்டி கானம் நாட்டுப் பாடல் கச்சேரி, கும்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## மகா சிவராத்திரி

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவு ஆலமாவனப் பிள்ளையார் கோவிலில் இம்முறை மிகச் சிறப்பாக சிவராத்திரிவிழா கொண்டாட ஆலயப் பரிபாலன சபை ஏற்ற ஒழுங்குகள் செய்து வருகின்றது

ஃ ஃ ஃ ஃ

குரும்பசிட்டி, வியாழன்

குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் மஹா சிவராத்திரித் தினத்தையொட்டி இம்மாதம் 26ந் திகதி இரவு நான்கு ஜாமப் பூசைகளும், விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற விருக்கின்றது. மறுதினம் அதிகாலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை சாகித்ய மண்டலத்தின் ஆதரவில் இம்மாத இறுதியில் இங்கு நடைபெறவிருந்த தமிழ் நாடக வளர்ச்சிபற்றியகருத்தரங்கு அடுத்தமாதத்திற்கு பின்போடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வை, எம். சி. ஏ மண்டபத்தில் அடுத்தமாதம் 5ம் 6-ம் திகதிகளில் நடைபெறும் இக் கருத்தரங்கிற்கு கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமை வகிப்பாரெனத்தெரிகிறது.

[கா. நி]

## கல்முனை உபதேர்தல்

# “சிறிமாவின் பிரசாரமே தமிழரசின் தோல்விக்குக் காரணம்”

### அமிர்தலிங்கம் கூறுகிறார்

சுழிபுரம், வியா

கல்முனை உபதேர்தல் முடிவுகளைப்பற்றியும், ஈழத்தில்வெளியாகும் பத்திரிகைகள் கூறும் கருத்துக்கள் பற்றியும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் கருத்துத்தெரிவித்தார்.

கல்முனை உபதேர்தல்முடிவு மாவட்ட சபைக்கு எதிரான தீர்ப்பு எனவும், முஸ்லிம் மக்கள் மாவட்ட சபையை ஏற்கவில்லையெனவும் சிலபத்திரிகைகள்தெரிவிக்கின்றன. கல்முனையில் நான் இரண்டு வாரம் இருந்தாலும், மக்களுடன் ஊடாடியதால் சில உண்மைகளைக் கூறவேண்டியிருக்கிறது. கல்முனைத் தொகுதியில் பெரும்பான்யான மக்கள் முஸ்லிம் மக்களாவர். தேர்தல் பிரசாரத்தின்போது தமிழரசுக் கட்சியோ அல்லது எதிர்க்கட்சியினரோ மாவட்டசபை சம்பந்தமாக எவ்வித பிரசாரமும் செய்யவில்லை. ஆனால் எதிர்க்கட்சித்தலைவர் திருமதி சிறிமாவோ பிரசாரத்தின்போது தமிழரசுக்கட்சியினரைத் தெரிவுசெய்தால் முஸ்லிம் மக்கள் திருநீறு அணியவேண்டிவரும் என்றும் தமிழர் ஆதிக்கம் வலுக்கும் எனவும் பிரசாரம்செய்தார். தேசிய அரசாங்கத்தைச்சேர்ந்த அமைச்சர்கள் தேர்தல் வேலையில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. பத்திரிகைகள் கூறுவது போல் மாவட்டசபைக்குப் பாதகமாக மக்கள் தீர்ப்பளித்துள்ளனர் என்பது தவறு.

## ரஷ்யத்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற சண்டையில் அமெரிக்க துருப்புகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹியூ நகரில் நடைபெறும் போரை, ‘மிகப்பயங்கரமானது’ என அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் வர்ணித்தார்

சண்டையில் இதுவரை 300 அமெரிக்கப் போர் வீரரும் 3,000 வடவியட்னுமியரும் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

# கிராமசபைத் தேர்தல்களில் தமிழ்காங்கிரஸ் பங்குபற்றுதாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ்ப்பகுதிகளில் நடைபெறவிருக்கும்கிராமசபைத் தேர்தல்களில் தமது கட்சி சார்பில் அபேட்சகர்களை நிறுத்துவதில்லையென்றும் மற்றும் கட்சிகள் தமது வேட்பாளர்களை கிராம சபைத் தேர்தல்களில் நிறுத்தும் பொழுது தமிழ்க்காங்கி... பின்னர் அதுபற்றி ...லோசனை செய்யுமென்றும் ...வ்வாய்க்கிழமை யாழ்ப் ...ணத்திலுள்ள கட்சிக்காரி...லயத்தில் நடைபெற்ற ...லங்கை தமிழ்க்காங்கிரஸ் ...லிப முன்னணியினரின் ...ட்டத்தில் தீர்மானிக்கப் ...ட்டது. இக்கூட்டத்திற்கு .... ஜி. ஜி. பொன்னம்ப... தலைமை வகித்தார். ...ப்பிட்டி எம். பி திரு. ... சிவசிதம்பரம், வவ...யா எம். பி. திரு. ரி. ...சிதம்பரம் ஆகியோர் ... கூட்டத்தில் கலந்து ...ண்டனர்.

...கட்சிக்கென ஒரு பத்திரிகை அவசியமென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பத்திரிகை யாழ்ப்பாணத்திலிருந்தே வெளி வர வேண்டுமென திரு. பொன்னம்பலம் கூறினார்.

பொய்ப்பிரசாரங்களையும், தமிழ்க்காங்கிரஸ் மீது சாட்டப்படும் அபாண்டங்களையும் அவ்வப்போது முறியடித்து பொதுமக்களுக்கு உண்மைகளை எடுத்துக் கூறுவதற்கு பிரச்சாரக் கூட்டங்கள் அவசியமென்றும் இதன் முதல் படியாக முதலாவது கூட்டத்தை விரைவில் காங்கேசன் துறையில் நடத்த வேண்டுமெனவும் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

வவனியா எம். பி. திரு ரி. சிவசிதம்பரம் பேசுகையில் நகெங்கிலும் உள்ள வாலிப முன்னணிகள் பலப்படுத்தப்பட வேண்டுமெனவும் சகல தொகுதிகளையும் சேர்ந்த ஒரு பொது வாலிப முன்னணி இயங்கவேண்டுமென்றும் கூறினார்.

[வி. நி]

# வேலையிழந்தவருக்கு யாழ். எம். பி. அளித்தஉறுதி

யாழ்ப்பாணம், வெள்ளி

சிங்களம் மட்டும் சட்டத்தால் வேலையிழந்த தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்னை பற்றி பிரதமர் டட்லி சேனநாயக்காவுடன், விரைவில் பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாக யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று முன்தினம் அவரைப்பேட்டிகண்டதூது கோஷ்டியிடம் உறுதி தெரிவித்தார்.

திரு. மகாலிங்கம் தலைமையில், வேலையிழந்த தமிழ் அரசாங்க ஊழியர் சங்க கோஷ்டியொன்று நேற்று யாழ்ப்பாணம் எம். பி.யை சந்தித்தது.

இதுவரைகாலமும் தங்கள் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லையென்றும், தேசிய அரசாங்கம் பதவியிலிருக்கும்போதே தங்கள் பிரச்னைக்கு முடிவுகாணவேண்டுமென்றும் தூதுகோஷ்டி கேட்டுக்கொண்டது

திரும்பவும் தங்களை வேலையில் அமர்த்த வேண்டுமென்றும் அல்லது நஷ்டஈடு வழங்கவேண்டுமென்றும் ... திரும்பவும் ... தையே விரும்புவதாகவும் தூதுகோஷ்டி தெரிவித்தது





மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது. இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள், சேர்ட்டுகள், காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது. தங்கள் குடும்பத்தினர் மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிறார்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம், இதுதான்—ஏனெனில், அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

JWT/S/2X54 ஒரு லீவர் உற்பத்தி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

புத்தகம்:

புதிய குடியியல் எட்டாம் வகுப்பு புதிய பாடத் திட்டத்திற்கு அமைவானது. பாடப்புத்தகமாக வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விலை 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1740

## தேவை

கல் உடைக்கும் தொழிலாளர்கள் தேவை. கியூப்புக்கு ரூ 10/- வீதம் நாள் சம்பளம. விண்ணப்பிக்கவும்:- எச். எம். ஆசிர்வாதம், உப தபாற் கந்தோர், ஊவாகுடா ஓயா, திசமாராம வழியாக. 1811

காடு திருத்தும் கொந்தராத்துக்காரர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்:- எச். எம். ஆசிர்வாதம், உப தபாற்கந்தோர், ஊவாகுடா ஓயா, திசமாராம வழியாக. 1812

தொகையான தொழிலாளர்களைக் கொண்ட 1000 ஏக்கர் பண்ணைக்குக் 'கண்டீன்' நடத்துவோர் தேவை. விண்ணப்பிக்கவும். எச்.எம். ஆசிர்வாதம் உப தபாற் கந்தோர், ஊவா குடா ஓயா, திசமாராம வழியாக. 1813

முதிரை ரூ. 8/-, மில்ல ரூ. 7[50, ஹகமில்ல ரூ. 9/50 பாலு, மெற்தோர, அலம்ப, கஹமுல்ல, நெரலு, கொலன்ன, வீர, கிலிகுலா மற்றும் கல்குலியா ரூ. 7/- முதலியன கியூபிக் அடி வீதமாக பிரதான வீதியில் கொள்வனவாளரின் லொறிகளுக்கு ஒப்படைக்கப்படும். சுற்றுவிட்டம் சுமார் 3 அடி. விண்ணப்பிக்கவும்;- எச். எம். ஆசிர்வாதம், ஊவா குடா ஓயா, திசமாராம வழியாக. 1814

## தேவை

எமது அச்சகத்திற்கு பிளேற்றின் மிஷின் மைண்டரும், அச்சுவேலை சேகரிப்பவரும் தேவை. கொமிஷன் கொடுக்கப்படும் விபரங்களுக்கு சுசிலாதேவி அச்சகம் சித்தங்கேணி. 1741

தேவன்ஸ் தயாரிப்புகளை தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகளும், சைக்கிள் விற்பனையாளர்களும் தேவை. தேவன் இன்டஸ்றீஸ், 46, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1743

## வகுப்புக்கள்

மெக்கானிக் பாடங்கள்

மார்ச் [பங்குனி] மாதம் முதல் மோட்டார், டிராக்டர், டீசல் வாகன மெக்கானிக் பயிற்சியும் துரித ச ரதிப் பயிற்சிகளும் நவீன முறையில் போதிக்கப்படும். விபரங்களுக்கு உடன் விண்ணப்பிக்கவும். அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீராஜ் ஓட்டோமொபைல் என்ஜினியரிங் நிறுவனம், மொம்சாக் மாளிகை மேல் மாடி, 11/B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1742

# சிவராத்திரி

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பளை கிழக்கு கலவாவத்தை ஞானவைரவர் சுவாமி கோவிலில் எதிர்வரும் 26-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் மகா சிவராத்திரி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கிறது.

இத்தினம் இங்கு கூட்டுப் பிரார்த்தனை, கதா காலட்சேபம் சங்கீதக் கச்சேரிகள் வில்லுப்பாட்டு ஆகியன இடம்பெறவுள்ளன.


கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] மைலன் [ஜிந்துப்பிட்டி]

விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]

மொடர்ன் [பதுளை] ராஜ் [நீர்கொழும்பு]

ரவிச்சந்திரன், கல்பனா, நாகேஷ் நடித்த



மதராஸ் To பாண்டிச்சேரி

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

எம். ஜி. ஆர். - பானுமதி சரோஜாதேவி நடித்த

நாடோடி மன்னன்


# புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கலைக்கோவில் 2-வது ஆண்டுப் பாதுக்கூட்டம் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் திரு. சொக்கன் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம், உபதலைவர்களாக திரு. சொக்கன், திருமதி ஸ்ரீதேவி பத்மநாதன், திரு. எஸ் இராசரத்தினம் [ராஜ்] ஆகியோரும், பொதுச்செயலாளராக கலாநிகேதன் வேல் ஆனந்தனும், பொருளாளராக திருமதி தமயந்தி மெஞ்ஞானசுந்தரமும், துணைச்செயலாளர்களாக செல்வி ஏ. ஆர். சொலமனும், திரு. ஏ. எஸ். மணியும் தெரியப்பட்டனர். 11 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியொன்றும் தெரியப்பட்டது. [கா. நி]

# நெடுந்தீவு கி. ச. தேர்தல்

நெடுந்தீவு, வியாழன்

நெடுந்தீவு கிராமசபைத் தேர்தல் இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெறுவதற்கான வேட்பாளர் தேர்தல்மனுப்பணம் இம்மாதம் 19-ம் திகதி நெடுந்தீவு கிராமசபைக் கந்தோரில் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்நகாள்ளப்பட்டது.

15 வட்டாரங்களைக் கொண்ட நெடுந்தீவு கிராமசபை தேர்தலில் இதுவரை 68 பேர் மனுப்பணம் செலுத்தி தேர்தலில் குதித்துள்ளார்கள். இம்மாதம் 27-ம் திகதி 1 மணிவரையும் 19-ம் திகதி நெடுந்தீவு கிராமசபையில் கட்டுப்பணம் கட்டத்தவறியவர்கள் யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள தேர்தல் கந்தோரில் தேர்தல் அதிகாரிகளிடம் செலுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 28-ம் திகதி நெடுந்தீவு கிராமசபை தேர்தல் வேட்பாளர் மனுப்பத்திரங்கள் நெடுந்தீவுகிராமசபைக் கந்தோரில் தேர்தல் அதிகாரியினால் [அன்று] 10 மணிக்கும் 11 மணிக்கு மிடையில் ஏற்றுக்கொள்ளப்படும்.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
9வது வாரம்!
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

REGAL JAFFNA
Daily at
4-45, -700, & 9-45 p.m.
Peter Sellers &
George C. Scott
in
DR STRANGE LOVE

நியூ காலிங்கன் (இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
தினசரி 2-30 க்கு மெற்னி
எஸ். எஸ். ராஜேந்திரன்
காஞ்சனா - தேவிகா
முத்துராமன் - சோ
நடித்த
மறக்க முடியுமா?



உ
சிவமயம்
கொடைவள்ளல் திரு. சு. கனகசபை அவர்களின்

அந்தியேஷ்டி - வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிலவங்க ஹூ மாசி மீ 13-உ (25-2-68) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கீரிமலையில் அந்தியேஷ்டியும் அவரது இல்லத்தில் வீட்டுக்கிருத்தியமும் நடைபெறும். அவ்வமயம் அன்பர்கள் யாவரையும் சமுகம் செய்யும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

478/5, கனகசபை அவனியு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

இங்ஙனம் திருமதி கனகசபை. 461


கிரிக்கெட்

# கண்டி யாழ்: கல்லூரிகள் மோதல் முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் கண்டி சென் சில்வஸ்ரர் கல்லூரிக்குமிடையே இரு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற ஒரு கிரிக்கெட் மோதல் நடைபெற்றும் நேரம் போதாத காரணத்தினால் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டி கண்டி சென். சில்வஸ்ரர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் [முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்தியகல்லூரி சகல விக்கட்டுகளோரிம் இழந்து மொத்தம் 163 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வி. ரி. சுந்தரலிங்கம் 15 ஓட்டங்களும், எஸ். சாந்திகரன் 33 ஓட்டங்களும், டி. புரட்சிதாசன் 39 ஓட்டங்களும் என். சுகுமார் 26 ஓட்டங்களும் எம். தில்லையம்பலம் 13 ஓட்டங்களும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் சென் சில்வஸ்ரர் கல்லூரியின் பந்தெறிவீரர்களான ராஜகருணா 57 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கெட்டுகளையும், என். வியுகி 37 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

சென். சில்வஸ்ரர் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றனர்.

மத்தியகல்லூரியினர் 2-ம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி சகல விக்கட்டுகளையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் நரேந்திரன் 12 ஓட்டங்களையும், கே. ஜெயக்குமார் 11 ஓட்டங்களையும் எஸ். சாந்திகரன் 64 ஓட்டங்களையும், டி. புரட்சிதாசன் 15 ஓட்டங்களையும், பி. பாலேந்திரா 54 ஓட்டங்களையும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் கண்டி சென். சில்வஸ்ரர் பந்தெறி வீரர் ராஜகருணா 75 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சென். சில்வஸ்ரர் 2-ம் இன்னிங்ஸ் துடுப்பெடுத்தாடி ஒரு விக்கெட்டை இழந்து 70 ஓட்டங்கள் பெற்றபொழுது ஆட்டம் நிறுத்தப்பட்டது. [வி. நி.]

# வாலிபர் சேஷ்டைகள் ஒழிக்க புதிய நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் மீண்டும் அதிகரித்துவரும் வாலிபர்களின் சேஷ்டைகளைக் கண்காணித்து நடவடிக்கைகளைமேற்கொள்ள வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயம் மீண்டும் சில புதிய நடவடிக்கைகளைமேற்கொள்ளத்தொடங்கியுள்ளது.

இப்புதிய நடவடிக்கையின் திட்டத்துக்கமைய யாழ்ப்பாணப் பகுதி 6 பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டு 6 பொலிஸ் அதிகாரிகளின் கண்காணிப்பின்கீழ் விடப்பட்டுள்ளது. பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் திருவாளர்கள் இராமநாதன், புஸல்ல. ஜெயசிங்க, டயஸ் ஆகியோரினதும், சப்இன்ஸ்பெக்டர்கள் சிறிவர்த்தனா, ஜெயதிலகா ஆகியோரினதும் கண்காணிப்பில் 6 பிரிவுகளும் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கூட்டமாகவும், இருவராகவும், வெளிச்சமின்றியும் சைக்கிளில்திரியும் வாலிபர்களும், வீதிகளிலும், மாணவிகளின் கல்லூரி வாசல்களிலும் நிற்கும் வாலிபர்களும் பொலிஸாரின் கண்காணிப்புக்கு இலக்காகுவார்கள் (கா. நி.)


MANOHARA
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45P.M
Lesley Core &
The Beach Boys
in
GIRLS ON THE BEACH
Musical with 9 Top Hits


தாய்லாந்தின்

# புதிய அரசியல் சாஸனம்

பாங்கொக், பெப். 22

தாய்லாந்தின் புதிய அரசியற் சாஸனத்தை தாய்லாந்து தேசிய சட்டசபை இன்று அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விளம்பரம்

## தேவை

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம், 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்திற்கு 1,00,000 "சி" தர சாக்குகள் தேவை. 25-2-68 பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பப் பத்திரங்களை நிபந்தனைகளுடன் பெற்றுக்கொள்ளவும்.

462 காரியதரிசி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 2000 மாணவர் கூடி தேசியகொடியை எரித்தனர்

## கோயம்புத்தூரில் கிளர்ச்சி

சென்னை, பெப். 21

கோயம்புத்தூரில் தேசியக் கொடியை எரித்த 4 மாணவர்களை இன்று பொலிசார் கைதுசெய்தார்கள்,

2000 மாணவர்கள் கூடியிருந்த ஒரு மைதானத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றது. கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் பிறகு ஜாமீனில் விடுதலைசெய்யப்பட்டனர்.

கோயம்புத்தூருக்கு சுமார் 60 மைலுக்கப்பால் பிரயாணிகள் ரயில் ஒன்றையும் மாணவர்கள் தடுத்து நிறுத்தினுர்கள்.

தமிழ்நாட்டில் சில மாணவர்கள் பிரிவினைக் கொள்கைகளைப் பின்பற்ற தவருக வழி நடத்தப்படுகிருர்களா என்பது குறித்து மத்திய அரசாங்கம்தீவிரமாகஆராய்ந்துவருவதாகவும் இதுபற்றி ராஜ்ய அரசாங்கத்திடம் தகவல் கோரப்பட்டிருப்பதாகவும் புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது.

---

### ரஷ்ய தூதரகத்தில் குண்டுவெடித்தது

வாஷிங்டன், பெப். 21

வாஷிங்டனிலுள்ள ரஷ்யத் தூதரகத்தில் வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் பலர் காயமுற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனுல் சேதம் அதிகமில்லையென்று பொலிசார் கூறினர்.

---

# 'ஈழத்தமிழ் மக்களின் பெருமையைஉயர்த்திவிட்டனர்'

## தமிழாராய்ச்சி மகாநாட்டில் பரிசுபெற்றவர்களுக்கு பாராட்டு

வெள்ளவத்தை, வியா

"கற்பனையோடு சுவை கலந்ததுதான் உண்மைக் கவிதை. எமது ஈழத்தில் அழியாத இடத்தைப்பெற்றுள்ள கவிஞர்கள் 'அம்பி' நாகராஜன் இருவரும் உலகத்தமிழ மகாநாட்டில் பரிசு பெற்றதனுல் ஈழத்தமிழ் மக்களின் பெருமையைப் பன்மடங்கு உயர்த்திவிட்டனர். பாரதியார், பாரதிதாசனை ஆரம்பத்திலேயே பார்த்துப் 'பாண்டியா நீ புலவனடா!' என்று கூறினுராம். நானும் இதுபோலவே இக்கவிஞர்களின் எதிர்காலத்தை முன்னரே உணர்ந்து சொல்லியுள்ளேன் இலங்கையில் கவிஞர்களைப் பாராட்டிவிட்டால். மாத்திரம் போதாது. அவர்களின் நிரந்தரமான தமிழ்வளர்ச்சிக்கு இச்சங்கம் ஏதாவது செய்ய வேண்டும்."

இவ்வாறு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டில் பரிசுபெற்ற ஈழத்துக் கவிஞர்கள் பாராட்டுப்பெற்ற கட்டுரையாளர்கள் அனைவருக்கும் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. கே. நடராசா பேசுகையில் கூறினுர். இலங்கை பெற்றோலியம் கூட்டுஸ்தாபனத் தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. நடராசா தொடர்ந்து கூறியதாவது:

பண்டைக்காலத்தில் மன்னர்கள் வளர்த்த தமிழை இன்று நாங்கள்தான் வளர்க்கவேண்டியுள்ளது. தமிழில் ஆற்றல்கொண்ட பெரியார்களை அங்கத்தவர்களாக கொண்ட கொழும்பு தமிழ்ச் சங்கம் தனது சேவைகளால் தமிழுக்குப் புதுஉருவம் கொடுக்கவேண்டும். பாரிசுக்குப் பின்னர் இலங்கையில் நடைபெறவிருக்கும் உலகத்தமிழ்ஆராய்ச்சி மகாநாட்டிற்கு ஆக்கபூர்வமான வேலைகளை அளிக்கும் தூண்களாக இச்சங்கமும் அங்கத்தினர்களும் இன்று முதல் மிளிரவேண்டும்.

பரிசுபெற்ற கவிஞர்கள் இ. நாகராஜன் 'அம்பி' இருவரும் தமது 'பூம்புகாரில் ஒருநாள்' என்ற கவிதைகளை வாசித்தார்கள். கவிஞர் திரு. அம்பி தமது வாசிப்புக்கு முகவுரையாகப் பேசுகையில் கூறியதாவது:

"1865-ல் டாக்டர் கிறீன் என்பவர் இலங்கையில் தமிழ்மொழியில் கலைச் சொல் ஒருமைப்பாடு என்பது பற்றி முதன்முதல் கட்டுரைகள் எழுதினுர். எனக்கும் மிக நீண்டகாலமாக இருந்துவந்த மேற்படி கருத்தை வலியுறுத்தும் படியாகவே மகாநாட்டுக் கவிதையையும் எழுதினேன். காபனிரொட்சைட்டா? கரியிருதியதையா? எது சரி என்ற வினு இன்று விஞ்ஞான மாணவர்கள்மத்தியில எழுந்துள்ளது. கலைச்சொல்லில் ஒருமைப்பாடு அவசியம். தமிழ்நாடு-இலங்கைப் பல்கலைக் கழகங்களில் கலைச்சொல் ஒருமைப்பாடு இல்லாத விஞ்ஞானம் ஏன்? விஞ்ஞானத் தமிழ் மரபு ஒன்று பொதுவாக உருவாக்கப்படவேண்டும். கலைச்சொல்லாக்க ஒருமைப்பாடு காண்பதுதான் உலகத்தமிழ்மகாநாட்டின் பெரும்பயனுக இருக்கமுடியும்"

தமிழகத்தில் கலைச்சொல்லாக்கம் பற்றிப் பேசிப் பாராட்டுப் பெற்ற திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் பேசுகையில் கலைச் சொல் ஒருமைப்பாட்டை தாம் விரும்புவதாகவும் தமிழக கல்வியமைச்சர் திரு, இரா நெடுஞ்சேழியன் இதற்கான தனிக்குழு அமைப்பதற்கும் ஈழத்துக் கலைச்சொற் தொகுதிகளையும் தமிழக கலைச்சொற் தொகுதிகளையும் சீர்தூக்கிப்பொதுவான ஆட்சித்துறை விஞ்ஞானக் கலைத்துறைப் பதங்களை ஆக்க முயற்சி செய்வதாயும வாக்குறுதி கொடுத்துள்ளார் என்றும் கூறினுர்.

கல்வித்திணைக்கள மொழிபெயர்ப்பாளர் திரு இரத்தினம் பேசுகையில் இலக்கியத் துறையில் பணியாற்றுபவர்கள் மட்டுமே தமிழ்த் தொண்டர்கள் என்றும் ஏனைய நீதித்துறை. பொறியியற்றுறை, வைத்தியத்துறை என்பனவற்றில் கடமையாற்றுபவர்களுக்குத் தமிழ்ப்பற்று இருக்கக்கூடாது என்கின்ற பலமான தப்பபிப்பிராயம் இன்று பலர் மத்தியில் எழுந்துள்ளது. இது மிகவும் வெட்கத்திற்குரியது. யாராகவிருந்தாலும்சரி தமிழ்த்தாய் மீது அன்பு கொண்டவர்களை நாம் வரவேற்கவேண்டும் அவரது தொண்டுணர்ச்சியைப் பாராட்டவேண்டும். தமிழ்நாட்டிற் பரிசுபெற்று ஈழத்தைப் பெருமைப்படுத்திய கவிஞர்கள் கட்டுரையாளர்களைத் தமிழ் மக்கள் ஆதரித்து பெருமைப்படவேண்டும் என்று கூறினுர் டாக்டர்.

---

'ரண் ஆப் கட்சு' பிரச்னை

# 'சர்வதேச தீர்ப்பை ஏற்பதுதான் அழகு'

## ராஜாஜி தெரிவிக்கும் கருத்து

புதுடில்லி, பெப். 21

'ரண்-ஆப் கட்சு' பிரதேசம் சம்பந்தமாகச் சர்வதேச விசாரணைச்சபை தெரிவித்துள்ள தீர்ப்பை பாரதம் ஏற்றுக்கொள்வதுதான் அழகு என்று முதுபெரும் அறிஞரான திரு. சி ராஜகோபாலசாரியார் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணைச் சபை தெரிவிக்குப் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக ஏற்கனவே இந்தியா ஒப்புக்கொண்டிருக்கிறது. இப்பொழுது தீர்ப்பு நமக்குச் சாதகமாகஇல்லையென்பதற்காக அதைப் புறக்கணிக்காமல் ஏற்றுக்கொள்வதுதான் அழகென்று ராஜாஜி கூறியுள்ளார்.

இன்று ராஜ்ய சபையில் பழைய மந்திரி திரு. எம். சி. சாக்ளா பேசுகையில் கட்சு தீர்ப்பு அரசியல் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. நீதி அல்லது சட்ட அடிப்படையான தீர்ப்பையே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இத் தீர்ப்பை நாம்ஏற்றுக்கொள்வதா நிராகரித்துவிடுவதா என்பது பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று தெரிவித்துள்ளார்.

---

### எம். பி.க்கு புகார்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள ஓர் அரசினர் ஆஸ்பத்திரியில் வார்ட்டில் தங்கும் நோயாளர்களிடம் படுக்கைக்கு காசு கேட்கிருர்களாம். அத்துடன் படுக்கை தேவையானுல் பெரிய டாக்டரை அவரது வீட்டில் நேரில் சென்று சந்தித்து விட்டு வாருங்கள் என்று சிறு ஊழியர்கள் தெரிவிக்கிருர்களாம். இச்சம்பவங்கள் இங்குள்ள ஆஸ்பத்திரியில் நடைபெறுவதாக இப்பகுதி மக்கள் எம். பி யிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

புகார் தெரிவித்த மக்கள் சமர்ப்பித்த மகஜரில் சம்பந்தப்பட்ட ஆஸ்பத்திரியில் படுக்கைக்குக் காசு கேட்கிருர்கள் என்றும், படுக்கை தேவை ஏனுல் 'பெரிய ஐயாவை' வீட்டில் கண்டுவிட்டு வாருங்கள் என்று கூறிக்கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது மகஜரின் பிரதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளதாகவும் அறியப்படுகிறது.

---

### திருக்கேதீஸ்வரம் செல்பவர்களுக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 26-ம் திகதி வரும் மகாசிவராத்திரிதினத்திற்கு யாத்திரிகர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் செல்ல விசேஷ பஸ் சேவையை யாழ்ப்பாணம் இ. போ. ச. ஒழுங்கு செய்துள்ளது. திருக்கேதீஸ்வரம் செல்ல விரும்பும் பிரயாணிகள் இம்மாதம் 24-ம் திகதிக்கு முன்னர் ஆசனங்களைபதிவுசெய்தால்போதிய பஸ்களை ஒழுங்குசெய்ய வசதியாக இருக்குமென கோண்டாவில் பஸ் டிப்போ சுப்பிரிண்டன் தெரிவித்துள்ளார்.

(நேற்றைய ஈழநாட்டில் 27-ம் திகதிக்கு முன்னர் என வெளியாகியது சரியானதல்ல.)

---

### பஸ் விபத்து பற்றி விசாரிக்க ஒரு குழு

கொழும்பு, புதன்

அண்மையில்பண்டாரவளைக் கருகில் தோவை என்ற இடத்தில் கடுகதிபஸ் விபத்துக்குள்ளானதில் 24 பேர் மரணமானது சம்பந்தமாக ஆராய்வதற்கென? நால்வர் கொண்ட குழுவொன்றை தேசியமய சேவைகள் மந்திரி திரு. சுகததாசா நியமித்துள்ளார்.

இக்குழு 1959ம் ஆண்டிலிருந்து ஏற்பட்டுள்ள பஸ் விபத்துகள் பற்றியும் அவைகளுக்கான காரணங்கள் பற்றியும் ஆராய்ந்து அவைகளைத் தடுப்பதற்கான மார்க்கத்தையும் சிபாரிசு செய்யும்.

---

# கடைசிச் செய்திகள்

### 14500டன் அமெரிக்க கோதுமை

புதுடில்லி, பெப் 21

14500 டன் அமெரிக்க கோதுமையை ஏற்றிக் கொண்டு கோழிக்கோடு துறைமுகத்துக்கு கப்பல் ஒன்று வந்திருக்கின்றது. இந்தக் கோதுமை முழுவதும் கேரளத்துக்குக்கொடுக்கப்படும்.

### 4200 பேர் விடுதலையாவர்

கல்கத்தா, பெப்.21

மேற்கு வங்காளத்தில் ராஷ்டிரபதிஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு திரு.கோஷ்ஆட்சியின்போது நடைபெற்ற கிளர்ச்சிகளில் கைதுசெய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று கவர்னர் தர்ம்வீர் அறிவித்துள்ளார். சதி மற்றும் வன்முறைகளுக்காக கைதானவர்கள் விடுதலைசெம்யப்படமாட்டார்களென்றும் அவர் தெரிவித்துள்ளார். சுமார் 4200 பேருக்குமேல் விடுதலையாவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### யுதாண்ட் முயற்சி

வாஷிங்டன், பெப்.21

வியட்னுமில்குண்டுவீச்சை நிறுத்துவதன்மூலம் சமாதானப் பேச்சுகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தும்படி அமெரிக்காவை ஐ. நா பொதுக்காரியதரிசி யுதாண்ட் கேட்டுக்கொள்ளவிருப்பதாக இங்கு அறிக்கப்பட்டது.

### 13 குழந்தைகளும் ஒருபெண்ணும் பலி

புதுடில்லி, பெப்.21

புதுடில்லிக்கு அருகிலுள்ள ஒரு இடத்தில் வீடொன்று தகர்ந்ததின் விளைவாக 13 குழந்தைகளும் ஒரு பெண்ணும் பலியானுர்கள். 12 பேர் படுகாயமுற்றனர், [illegible] பொழுது இந்த விபத்து ஏற்பட்டதாம்.

---

### நாட்டிலும் நகரிலும்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

மொழியார் திருவாளர் மெல்லின திடகாத்திர வல்லியாக மாறிவிடுவார். அவரைஎல்லோரும் மிஸ்டர் திடகாத்திரவல்லி என்று அழைப்பார்கள்.

இப்படி எத்தனையோ கற்பனைகள் தோன்றுகின்றன.

ஆனுல் பேராசிரியர் புல்லர் கூறிய இன்னெரு விஷயம் மனதுக்கு குளிர்ச்சியை தருகிறது.

'பெண்கள் சிறிது சிறிதாக ஆடைகளை அகற்றிக் கொண்டே வந்து இறுதியில் ஏவாள் போல சுதந்திரமாகத் திரிவார்கள். ஆண் அந்த வெறும் உடலைக்கண்டு அதில் அலுத்துப் போய், குழந்தை பெறும் வேகத்தைக் குறைத்துக் கொள்வான்,' என்கிருர் புல்லர், கடவுள் காவல்!!

வழிப்போக்கன்

---

### போக்கு வரத்து துண்டிப்பு

பூநகரி,வியாழன்

விடைத்தல்தீவுக்கும் இலுப்பைக் கடவைக்குமிடையிலுள்ள மின்னல் நிறைந்தான் பாலம் உடைந்ததால் போக்கு வரத்து தடைப்பட்டுள்ளது.

இதையடுத்து பூநகரிக்கும் மன்னருக்குமிடையில் நடைபெற்றஇ.போ.சபஸ்சேவை தடைப் பட்டுள்ளது. இதையறியாத நூற்றுக் கணக்கான மக்கள் ஏமாந்து திரும்பிச்சென்றனர்.

பாலத்தைத் திருத்தும் வேலையில் உடனடியாக பகிரங்க வேலைப்பகுதி ஈடுபட்டுள்ளது. இன்னும்சில தினங்களில் பாலவேலை முடிவடைந்து நிலைமை சீர்அடைந்து விடும் என நம்பப் படுகின்றது.

---

### பொலிஸாரின் புதிய நடவடிக்கை

இமையாணன், வியாழன்

சமீபத்திய பஸ் விபத்துக்களின் எதிரொலியாக இப்போது இ. போ. ச. பஸ் சாரதிகள் மீதும் கண்டக்டர்கள் மீதும் பொலிஸார் அதிக கண்டிப்பாக இருந்து வருவதாகஅறியப்படுகிறது.

மேலதிகமாக பிரயாணிகளை ஏற்றிச்செல்வது, பஸ் தரிப்பு நிலையங்களை மீறி பஸ்ஸை நிறுத்துவது போன்ற குற்றங்களுக்கு பொலிசார் உடன் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது. இத்தகைய குற்றங்களுக்குள்ளாகும் பஸ் கண்டக்டர்கள் சாரதிகள்மீது வழக்கு தொடரப்படுகின்றன. இவ்வித நடவடிக்கை காரணமாக சில சமயங்களில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org